# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.133/2020** **Date:03-07-2025**
**(P.W- 2)**

திரு. மாஸ்தி முத்து த/பெ நாகராஜ்
**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1.1) எனது சொந்த ஊர் பெரியநாயக்கன் பாளையம், நான் அங்கு தான் பிறந்து வளர்ந்தேன். தற்போது நான் அங்கு தான் குடியிருந்து வருகிறேனா என்றால் வருகினே். இந்த வழக்கு யார் யார் மீது என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். தாவா சொத்து க.ச.எண் தெரியுமா என்றால் 4/303 ஆகும். 1 ம் வாதி பாலசுப்பிரமணியம் கம்பெனியில் என்னவாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் அலுவலக உதவியாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் அவருடைய அலுவலகத்தில் தான் பணிபுரிந்து வருகிறேன் என்பதனை காட்ட எதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதுபோல் எந்த ஆவணமும் இல்லாததால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

1.2) தாவா சொத்தில் அமைந்துள்ள கட்டிடம் கட்டியது முதல் எக்காலத்திலும் 1 , 2 வாதிகள் குடியிருந்தது இல்லை வாடக்கைக்கு தான் விட்டு உள்ளார்கள் என்றால் சரிதான். தெக்கலூரில் உள்ள இரண்டு வீடுகளுக்கும் பெரியநாயக்கன் பாயைத்தில் வீட்டிற்கும் நான் தான் வாடகை வசூல் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அதைதவிர வாதிகளுக்கு சொந்தமாக வீடு உள்ளதா என்றால் சரிதான். நான் கடந்த 2017 முதல் தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தை பராமரித்து அதற்கான வாடகையை வசூல் செய்து வருகிறேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளது நான் இந்த வழக்கிற்காக

ஜோடித்துள்ளதாகவும், தாவா சொத்திலும் அதனை ஒட்டியுள்ள இடத்திலும் அமைந்துள்ள ராசாத்தம்மன் கோயில் உள்ளூர் மக்கள் வழிபட்டு வரும் பழமையான கோயில் என்றால் சரிதான்.

1.3) வாதிகள் கட்டிடம் கட்டுவதற்கு முன்பாகவே கோயிலும் அதனையுட்டியுள்ள மண்டபமும் உள்ளது என்றால் சரிதான். கடந்த 2020 ம் ஆண்டு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தாவா சொத்தை பொறுத்து ஒரு உத்தரவு பிறப்பித்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உத்தரவில் புல எண் 797/6 புறம்போக்கு நிலம் என தெரிய வருவதால் அதனை ஒருவார காலத்திற்குள் அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டுமென வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான்.

1.4) மேற்படி உத்தரவில் தென்னை மரங்களையும் அப்புறப்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கடந்த ஜனவரி 2020 ல் ராசாத்தம்மன் கோயில் ஆட்கள் ஒன்றாக சேர்ந்து தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து வாதிகளின் அமைதியான சுவாதீனத்தை குழைத்தனர் என்றும், மேலும் கடந்த ஏப்ரல் 2020 ல் கொரனா ஊரடங்கு இருந்த சமயத்தில் வாதிகளின் சொத்துக்குள் பிரதிவாதிகள் நுழைந்து தென்னை மரங்கள் அனைத்தும் வெட்டினார்கள் என்றும் அப்போது பிரதிவாதிகள் 1 ம் வாதியிடம் சொத்தினை கோயிலுக்காக ஆக்கரிமிக்க போவதாக சவால் விட்டார்கள் என சொல்லியுள்ளது இவ்வழக்கிறக்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

1.5) நான் சொல்வது போல் சம்பவங்கள் ஏதேனும் நடந்து இருந்தால் புகார் கொடுத்து இருப்பேன் ஊரடங்கு காலத்திலும் புகார் கொடுக்க எவ்வித தடையும் விதிக்க வில்லை என்றால் சரிதான். மேலும் நான் பிரமாண வாக்குமூலத்தில் கடந்த 10.08.2020 ல் ராசாத்தம்மன் கோயில் ஆட்கள் சேர்ந்து வாதிகளின்

சொத்தில் அத்துமீறி நுழைந்து சொத்தில் உள்ள வேலியினை சேதப்படுத்திவிட்டு சொத்தில் கட்டுமான பணியினை ஆரம்பித்துள்ளார்கள் என சொல்லியுள்ளது இவ்வழக்கிறக்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலும், நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் நானும் சொத்தில் உள்ள வாடகைதாரர்களும் சேர்ந்து அதனை முறியடித்தோம் என்றும் அதன்பின் அவர்கள் அனைவரும் வைத்திருந்த கற்கள் மற்றும் கட்டுமான பொருட்களை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு ஓடிவிட்டனர் என சொல்லியுள்ளது இவ்வழகக்கிறக்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

1.5) அதேபோல் கோயில் ஆட்கள் வாதிகளையும் மற்ற நில உரிமையாளர்களையும் மிரட்டி ஆக்கிரமிப்பு செய்து கட்டுமான பணிகள் செய்தார்கள் என்று கூறுவதும் இவ்வழக்கிறக்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது முதலாளியான 1 ம் வாதி சொத்துக்கும் கோயில் சொத்துக்கும் இடையில் கம்பி வேலி உள்ளது என்றால் சரிதான். கோயில் உள்ள கட்டுமானங்கள் அனைத்தும் ஆரம்ப காலத்தில் இருந்தே இருந்து வருகிறது என்றால் சரிதான். இக்கோயிலுக்கு இந்த ஊர் மக்கள் மட்டுமில்லாமல் வெளியூரில் இருந்து வழிபாடு செய்ய வருவார்கள் என்றால் சரிதான். மேற்படி கோயில் அங்குள்ள கொங்கு வேளாளர் சமூதாயத்தின் குல தெய்வ கோயில் என்றால் சரிதான்.

1.6) தற்போதும் இக்கோயில் வழிபாடு செய்வது தொடர்ச்சியாக நடந்து வருகிறது என்றால் சரிதான். வாதிகள் அவர்களுக்கு உரிமையில்லாத நிலையில் கோயில் நிலத்தையும் சேர்த்து ஆவணம் செய்து கொண்டார்கள் அவர்கள் கேட்டுகொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

5ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

KANMANI T

Digitally signed by KANMANI T
Date: 2025.07.03 17:41:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.